ஆற்றல்மிகு அல்லாஹ்

அல்லாஹு அல்லாஹ் அல்லாஹு அல்லாஹ்

அல்ஹம்து லில்லாஹ் ஆளுகின்ற வல்லா

ஆற்றல்மிகு அல்லாஹ் – உன்னைப்

போற்றுகின்றேன் அல்லாஹ்

அல்லாஹு அல்லாஹ் அல்லாஹு அல்லாஹ்

அல்ஹம்து லில்லாஹ் ஆளுகின்ற வல்லா

உனக்கிணை இல்லை உவமைகள் இல்லை

அணைத்திடும் உனை தொழுதால் துன்பமே இல்லை
ஆதி இறையோனே ரஹ்மானே மறையோனே – ஓ
ஆற்றல்மிகு அல்லாஹ் – உன்னைப்
போற்றுகின்றேன் அல்லாஹ்
எங்கும் நிறைந்தோனே எழில் சிறந்தோனே
இன்பமே மிகுந்தோங்கும் பொங்கும் ஒளியோனே

அன்பு இறையோனே ரஹ்மானே மறையோனே

– ஓ

ஆற்றல்மிகு அல்லாஹ் – உன்னைப்

போற்றுகின்றேன் அல்லாஹ்

வானம் படைத்தோனே வையம் படைத்தோனே

மாநபி பெருமானை மாண்புடன் தந்தானே

அன்பு இறையோனேம ரஹ்மானே மறையோனே

ஆற்றல்மிகு அல்லாஹ் – உன்னைப்

போற்றுகின்றேன் அல்லாஹ்